சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு ஊரக வளர்ச்சிப் பணி – ஊரக வளர்ச்சி துறையில் இணை இயக்குநராகப் பணியாற்றும் தகுதியுடைய அலுவலரை பதவி உயர்வில் (by promotion) ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநராக நியமனம் செய்ய 2009–10ஆம் ஆண்டிற்கு தற்காலிகத் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(இ1) துறை

அரசாணை (4டி) எண்.1 நாள் 26.2.2010

படிக்க:-

1. அரசாணை (டி) எண்.544, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(இ1) துறை, நாள் 22.9.09
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடித எண்.60375/09/ ஜிஇ 1.1, நாள் 30.01.2010.

-------

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையில் 2009–10ஆம் ஆண்டிற்கு ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் நிலையிலான காலிப்பணியிடம் ஒன்று மதிப்பீடு செய்யப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையில் காலியாக உள்ள ஒரு ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் பணியிடத்தை நிரப்ப ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசிற்கு அனுப்பிய முன்மொழிவினை அரசு கவனமாகப் பரிசீலனை செய்ததில், ஊரக வளர்ச்சி இணை இயக்குநர் நிலையில் உள்ள திரு.கே.மேகராஜ் அவர்களை, தகுதியின் அடிப்படையில், தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணிவிதிகள் 39(a)(1)இன் கீழ், ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநராக பதவி உயர்வு அளிக்க ஏதுவாக திரு.கே.மேகராஜ் என்பவர் பெயரினைக் கொண்ட, 2009–10ம் ஆண்டிற்கான ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநருக்கான தற்காலிகத் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலுக்கு ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது.

2. மேலே பத்தி ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையில் கூடுதல் இயக்குநராகப் பதவி உயர்வு பெற முழுத்தகுதிகளையும் பெற்றுள்ளார்.

…2

3. இவ்வாணையில் கண்ட தற்காலிக தேர்ந்தோர் பெயர்ப்பட்டியலை தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணி விதிகள் பொதுவிதி 4(a)இல் குறிப்பிட்டவாறு சம்பந்தப்பட்டோருக்கு அனுப்பிவைக்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அசோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
சம்பந்தப்பட்ட அலுவலர்
**வழி** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15
மாநில கணக்காயர், சென்னை–5/18/35
கருவூல மற்றும் கணக்குகள் இயக்குநர், சென்னை–15.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்.
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–9/35
**நகல்**
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை –9
இருப்புக் கோப்பு/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.